**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டிராக்டர் வாகனம் எண்.TN76 AF5635 வாகனத்திற்கு

1. நான்கு வீல் கிரீஸ் பேக்கிங், பிரேக் செக்கப் செய்தல்.
2. பிரேக் கம்ப்ளீட் ஓவராயிலிங் செய்தல்
3. இஞ்சின் ஆயில், கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ் ஆயில், கூலண்ட் ஆயில், ஆயில் பில்டர்கள் மாற்றம் செய்தல், ஆயில் நீங்கலாக.
4. இஞ்சின் வால்வு டோர் பேக்கிங் மாற்றம் செய்தல்
5. பிளாட்பார்ம், கேபிள் டோர் டிங்கரிங் செய்தல், டோர் லாக் சரி செய்தல்

போன்ற பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு மேற்படி பழுதுகளை நீக்கம் செய்வதற்கு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்களின் 02.09.2021ம் தேதிய அனுமதியின்படி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் இதற்கான செலவினம் ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4273 / 2021/எச்1)**

**தீர்மான எண். 568**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் 22வது பொதுமக்கள் 17.07.2019ம் தேதி மற்றும் அன்னை ஸ்கூல் நிறுவனத்தார் 18.07.2019ம் தேதிகளில் இந்நகர்ப் பகுதிகளில் பன்றிகள் அதிகமாக அலைந்து திரிந்து சுகாதாரக்கேடு ஏற்படுத்துவதாக வரப்பெற்ற புகாரினை அடுத்து இவ்வலுவலக ந.க.எண்.403/2012/எச்1, நாள்.30.07.2019ல் இந்நகர்ப்பகுதிகளில் பன்றி வளர்க்கும் நபர்களை ரோட்டில் சுற்றித்திரியும் பன்றிகளை நகராட்சி எல்லையை விட்டு அப்புறப்படுத்திட கேட்டு அறிவிப்பு வழங்கப்பட்டது.

இது தொடர்பாக மனுதாரரான திரு.கோபால் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.19282 of 2019ல் தனக்கு பன்றி வளர்க்க உரிமம் கோரியும் அதுவரை தாம் வளர்க்கும் பன்றிகளை தொந்தரவு செய்யாமல் இருக்க கேட்டு வழக்கு தொடர்ந்ததில் மாண்புமிகு நீதிமன்றம் மனுதாரரை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உரிய விண்ணப்பம் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள உத்திரவிட்டது.

இதன்படி மனுதாரரான திரு.கோபால் 14.08.20ம் தேதி கடையநல்லூர் நகராட்சி ஆணையாளருக்கு உரிய விண்ணப்பம் செய்தார். இதன் பேரில் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் ந.க.எண்.2753/2020/எச்1, நாள்.31.08.2020ல் பன்றி வளர்க்க உரிய விண்ணப்பத்தை நிராகரித்து உத்தரவிடப்பட்டது.

இதன் பின்பு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No.11230of 2020ல் தொடர்ந்ததில் மனுதாரரின் கோரிக்கை மீது நான்கு வாரங்களுக்குள் பதிலளிக்க மாண்புமிகு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது. இதன்படியும் மனுதாரருக்கு மீண்டும் 25.09.2020ம் தேதி மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரித்து உத்தரவு அனுப்பப்பட்டது.

பின்னர் மனுதாரர் இவ்வுத்தரவின் மீது சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்தார். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் ந.க.எண்.20654/ஜே2/20, நாள்.22.07.2021ல் நகராட்சி ஆணையரின் உத்தரவு மீது உரிய முடிவு எடுக்கும் அதிகாரம் 1920ம் வருட

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **322(1)** (C) ஆகியவற்றின் கீழ் நகர்மன்றத்திற்கு உள்ளது என தெரிவித்து கடிதம் அனுப்பியதின் பேரில் மனுதாரர் இந்த மேல்முறையீட்டு மனுவை இந்நகர்மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

எனவே இது குறித்து மன்றத்தின் உத்திரவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2753 / 2020/எச்1)**

**தீர்மான எண். 569**

கடையநல்லூர் நகராட்சி பகுதி தெருக்களில் பன்றிகள் அலைந்து திரிவது பொதுமக்களுக்கு இடையூறு & அருவருப்பை ஏற்படுத்துகிறது என்பதினாலும் மேலும் இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளதாலும் மற்றும் இது மூளைக் காய்ச்சல் & பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கு ஏதுவாகிவிடும் என்பதினாலும், இந்த கடையநல்லூர் நகராட்சி ஏற்கனவே டெங்கு பாதிக்கப்பட்ட பகுதி என்பதினாலும் மற்றும் மனுதாரர் திரு.G.கோபால், த/பெ.கோவிந்தன் என்பவர் 3, கண்ணார் தெரு, இந்திரா நகர், மேலக்கடையநல்லூர் என்ற இடத்தில் பன்றி வளர்க்க அனுமதி கேட்டு மேல்முறையீடு செய்துள்ள விண்ணப்பம் **1939**ம் வருட பொதுசுகாதாரச் சட்டம் பிரிவுகளின்படி பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு நிராகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் **22**வது பொதுமக்கள் **17.07.2019**ம் தேதி மற்றும் அன்னை ஸ்கூல் நிறுவனத்தார் **18.07.2019**ம் தேதிகளில் இந்நகர்ப் பகுதிகளில் பன்றிகள் அதிகமாக அலைந்து திரிந்து சுகாதாரக்கேடு ஏற்படுத்துவதாக வரப்பெற்ற புகாரினை அடுத்து இவ்வலுவலக ந.க.எண்.**403/2012**/எச்**1**, நாள்.**30.07.2019**ல் இந்நகர்ப்பகுதிகளில் பன்றி வளர்க்கும் நபர்களை ரோட்டில் சுற்றித்திரியும் பன்றிகளை நகராட்சி எல்லையை விட்டு அப்புறப்படுத்திட கேட்டு அறிவிப்பு வழங்கப்பட்டது.

இது போன்று பன்றி வளர்க்கும் வேறொரு நபரான திரு.கோபால் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.19282 of 2019ல் தனக்கு பன்றி வளர்க்க உரிமம் கோரியும் அதுவரை தாம் வளர்க்கும் பன்றிகளை தொந்தரவு செய்யாமல் இருக்க கேட்டு வழக்கு தொடர்ந்ததில் மாண்புமிகு நீதிமன்றம் இவரை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உரிய விண்ணப்பம் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள உத்திரவிட்டது.

இதன்படி திரு.எம் முப்புடாதியும் **25.08.20**ம் தேதி கடையநல்லூர் நகராட்சி ஆணையாளருக்கு உரிய விண்ணப்பம் செய்தார். இதன் பேரில் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் ந.க.எண்.**2753/2020**/எச்**1**, நாள்.**31.08.2020**ல் பன்றி வளர்க்க உரிய விண்ணப்பத்தை நிராகரித்து உத்தரவிடப்பட்டது.

இதன் பின்பு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.11347 of 2020ல் தொடர்ந்து மனுவை திரும்ப பெற்றுக்கொண்டார்.

பின்னர் மனுதாரர் இவ்வுத்தரவின் மீது சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்தார். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் ந.க.எண்.**20654**/ஜே**2/20**, நாள்.**22.07.2021**ல் நகராட்சி ஆணையரின் உத்தரவு மீது உரிய முடிவு எடுக்கும் அதிகாரம் **1920**ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **322(1)** (C) ஆகியவற்றின் கீழ் நகர்மன்றத்திற்கு உள்ளது என தெரிவித்த கடிதம் அனுப்பியதின் பேரில் மனுதாரர் இந்த மேல்முறையீட்டு மனுவை இந்நகர்மன்றத்திற்கு அனுப்பியுள்ளார்.

எனவே இது குறித்து மன்றத்தின் உத்திரவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2753 / 2020/எச்1)**

**தீர்மான எண். 570**

கடையநல்லூர் நகராட்சி பகுதி தெருக்களில் பன்றிகள் அலைந்து திரிவது பொதுமக்களுக்கு இடையூறு & அருவருப்பை ஏற்படுத்துகிறது என்பதினாலும் மேலும் இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளதாலும் மற்றும் இது மூளைக் காய்ச்சல் & பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கு ஏதுவாகிவிடும் என்பதினாலும், இந்த கடையநல்லூர் நகராட்சி ஏற்கனவே டெங்கு பாதிக்கப்பட்ட பகுதி என்பதினாலும் மற்றும் மனுதாரர் திரு.எம்.கோபால், த/பெ.முருகன் என்பவர் 11, ரயில்வே பீடர் ரோடு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்ற இடத்தில் பன்றி வளர்க்க அனுமதி கேட்டு மேல்முறையீடு செய்துள்ள விண்ணப்பம் 1939ம் வருட பொதுசுகாதாரச் சட்டம் பிரிவுகளின்படி பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு நிராகரிக்கப்படுகிறது.

(ஒம்)S.M.பாரிஜான்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.